# திருக்குறள் மேலாண்மையில் அன்பு நெறிகள்

**முனைவர். ப.பிரியதர்ஷினி**

**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**

**ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**சூலூர் – கோயம்புத்தூர்,**

Priyaarundharshini16@gmail.com

6

**ஆய்வுச்சுருக்கம்:**

திருக்குறள் உலகப் பொதுமறை என வழங்கப்படும் தமிழ் மொழி நூல்.தமிழின் தலைசிறந்த நூல்களுள் ஒன்றாக, உலகின் குறிப்பிடத்தக்க நீதி நூல்களுள் ஒன்றாகக் கருதப்படும் தமிழ் நீதி நூல். சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த பதினெண்கீழ்க்கணக்கு நூலான திருக்குறள் தமிழில் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட மற்றும் அதிகம் மேற்க்கோள் காட்டப்பட்ட 1812 முதல் இடையறாது அச்சில் இருக்கும் நூலாக திகழ்கிறது. குறள் வெண்பா என்னும் பா வகையிலான 1330 ஈரடிச் செய்யுள்களைக் கொண்ட திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் என்ற பெயரில் உள்ள திரு என்பது தமிழில் மரியாதையையும் மேன்மையையும் குறிக்கும் ஒரு சொல்.இச்சொல் இந்திய அளவில் பொதுவான புனிதமான சிறந்த கௌரவமான அழகான என்று பலவாறு அழைக்கப்பட்டுவருகிறது.. திருக்குறள் சங்க காலத்தைச் சேர்ந்த இலக்கியம்.இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல்.அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் வாழ்வின் எல்லா அங்கத்தையும் கூறியுள்ளது.வாழ்வில் கடைபிக்க வேண்டிய அனைத்து நன்நெறியும் கூறப்பட்டுள்ளது. உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்கப்பட்ட நூலாக திருக்குறள் உள்ளது என்றால் அது மிகையாகாது.

**ஆய்வுநோக்கம்**:

உலகின் மிகப்பெரிய செல்வம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே.மனங்களில் ஏதேதோ எண்ணங்கள் பார்க்கும்முகம் எல்லாமே சிந்தனைவயப்பட்டதாகவே தோன்றுகிறது. இறுக்கமான மனிதர்களாகவும் இயந்திர கதியான மனிதர்களாகவுமே தற்போதைய மனிதர்கள் காணப்படுகின்றனர். எண்ணக்குவியல்களின் கலவைகளையும் சிந்தனை ரேகைகளையும் கொண்ட மக்கள் கூட்டத்தைக் காணும் திசையெல்லாம் பார்க்க முடிகிறது. சக மனிதனைக் கண்டு மகிழும் உள்ளமோ இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதலோ இல்லாமல் தனியொரு உலகில் சிந்தனைகளோடே பயணிக்கும் உலகமாக மாறிவிட்டது.

கடவுச்சொற்கள்:

வாழ்வியல் நுகர்தல், வானுறையும், இல்லறம்.

**உபதலைப்புகள்:**

பண்டைய தமிழரின் வாழ்வியல் அறம் - வாழ்வாங்கு வாழ - ஔவையார் குறிப்பபிடும் வாழ்வியல் அறம்- தனி மனித வாழ்வு - அறநெறிப்பட்ட வாழ்க்கை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."[1]

எனும் குறலுக்கேற்ப நல்ல செயல்களைக் கொண்டு வாழ்பவனே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனாக கருதப்படுவான்.அதாவது இல்லற முறைப்படி வாழ்பவன் இந்த உலகிலேயே தெய்வத்துக்கு ஒப்பாக போற்றப்படுவான்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்."[2]

என்றார் பாரதி. வாழ்வாங்கு வாழ்தல் என்பது வாழவேண்டிய முறையில் வாழ்வதைக் குறிப்பது என்கிறார்.அன்பும் அறனும் கொண்டு இயல்பினால் இல்லறம் பேணுவது வாழும் நெறியாகும் என்ற கருத்தை நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது.உலகத்திலே வாழும் முறைப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களில் ஒருவராக வைத்து மதிக்கப்படுவார்.

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் ஒருவன் தன் துணைவிமேல் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்து உண்டல் ஆகிய அறத்தினையும் உடைத்தாயின்.இல்லறம் என்னும் நல் வாழ்க்கை ஒருவனுக்கு நல்முறையில் அமைந்தால் மட்டுமே அவனுடைய எண்ணங்களும் சிந்தனைகளும் நல்முறையில் அமைந்திருக்கும் என்பது வாழ்க்கையின் நியதியாக உள்ளது. எனவே தான் வள்ளுவர்

"அன்பும் அறனும் உடைத்தயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."[3]

என்று வாழ்க்கையின் தத்துவத்தை தன் குறளில் கூறியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

பண்டைய தமிழரின் வாழ்வியல் அறம்:

தமிழர்கள் சமூக நெறி முறைகளை அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக பகுத்தனர்.இதில் அறம் என்பது தலைசிந்த ஒன்றாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.எனவே தான்

"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்."[4]

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் அன்பைத் தழுவி நிற்கும்.இன்ப நுகர்ச்சிக்குத் தேவைப்படுவது பொருள்.அப்பொருள் அறவழியில் வரவேண்டும் இத்தகைய பண்பாடே தமிழரின் அறப்பண்பாடு ஆகும்இல்லறம் மேற்க்கொண்ட தலைவன் தான் ஈட்டிய பொருளை தக்கார்க்குப் பகுத்துக் கொடுத்து வாழும் வாழ்க்கையே சிறந்த அறமுடைய வாழ்கை என்று கருதினான்.

"உள்ளத்து சிதைப்போர் உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் **இளிவெனச்**

சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்

சென்றனர் வாழ் தோழி".[5]

என்ற பாடல் மூலம் காணமுடிகிறது.பொருள் இல்லார்க்கு ஈதலே சிறந்த அறம் அதனை விடுத்து தான் துய்ப்பது அறமற்ற செயல் என்று கருதியதோடு அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தும் காட்டினர் என்பதை

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்

சேயவினை கைம்மிக எண்ணுதி

அவ்வினைக்கு

அம்மா அரிவையும் வருமோ

எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே."[6]

அதாவது அறம் சிறப்பையும் அளிக்கும் செல்வத்தையும் அளிக்கும். ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மை தருவது வேறு ஏதும் இல்லை.

ஔவையார் குறிப்பபிடும் வாழ்வியல் அறம்:

வாழ்வியல் அறம் தனி ஒரு மனிதனின் எண்ணங்களின் அடிப்படையில் தான் அமைக்கப் பட்டது.எண்ணங்கள் தான் ஒரு மனிதனின் வாழ்க்கையினை தீர்மானிக்கிறது.நமது வாழ்வினை நாமே மாற்றி அமைத்துக் கொள்ளும் திறன் படைத்த மனிதர்களாகிய நமது எண்ணங்களுக்கு எல்லையற்ற ஆற்றல் உண்டு.

"கொடிது கேட்கின் நெடிவெல்
வேலாய்

கொடிது கொடிது வறுமை
கொடிது

அதனினும் கொடிது இளமையில்
வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக்
கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது இன்புற அவர்கையில்

உண்பது தானே."[7]

கொடிது என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார்

தனிமனித வாழ்வு:

நாம் பிறரிடம் காட்டும் அன்பே மனிதனை மேன்மையடையச் செய்கிறது எண்ணங்களே ஒரு மனிதனின் வெளிப்பாடு என்றால் மனித வாழ்க்கைக்கான அனைத்தும் மனதின் செய்கையால் உண்டாக்கப்படுகிறது.அதுவே அனைத்தையும் உண்டாக்குகிறதென்று நம்புகிறார்கள்.

"ஓவ்வொரு மனிதனும் தெய்வீகமாக மாற வேண்டும்

எனில் முதலில் மனதில் தோன்றும் எண்ணங்களை

அடக்க வேண்டும்”[8]

என்று சுவாமி விவேகானந்தர் தனி மனித வாழ்க்கையில் எண்ணங்களின் வெளிப்பாட்டைப் பற்றிக் கூறியுள்ளார்.

அறநெறிப்பட்ட வாழ்க்கை:

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்க்குள் நின்று விடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களைவிரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாக உள்ளது.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற.”[9]

மனம் மாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது.அதுவே அன்பின் அடையாளமாக அமைந்துள்ளது.அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகோள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் கண்டது இல்என்று கூறுகிறார் வள்ளுவர்.

“பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியஞ்சல் எஞ்ஞான்று இல்.”[10]

சிறந்த வாழ்க்கை என்பது பழிக்கு அஞ்சி வாழ்வது தான். மற்றவர் பழிக்காத வண்ணம் தன் வாழ்க்கையை ஒருவன் அறம் சார்ந்து பொருளீட்டி வாழவேண்டும்.அவ்வாறு சேர்த்த பொருளை மற்றவர்களுக்கும் பகிர்ந்து தானும் உண்டு வாழ வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

“பிறர் துன்பத்தை உணர்வது தன் துன்பத்தை போக்க அடிகோல்வதாகும்.பிறர் துயரைப் போக்கக் கடனாற்றுகிறவன் தன் துயரைப் போக்கிக் கொண்டவனாவான் எவ்வுயிரையும் தன்னுயிரெனக் கொண்டு உயிர்கள் நலங்கருதி உழைக்கும் ஒருவன் உள்ளத்தில் தெய்வம் குடியிருக்கும்”.[11]

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினத்திற்க்கும் ஒரு வாழ்க்கை முறை உண்டு.ஓரறிவுமுதல் ஆறறிவு வரை அனைத்து உயிர்களுக்குமே தனக்கென்று ஒரு வாழ்க்கை உண்டு.அதிலும் சிந்தித்துச் செயலாற்றும் தன்மை கொண்ட அறிவு பெற்ற மனித இனத்தின் வாழ்வு மற்றவறை விட மேம்பட்டதாகவே உள்ளது. ஒருவரை மற்றவர் சந்திக்கும்போது மற்றவர் வாழ்த்துகின்ற பண்பு நலம் முற்றிலும் தமிழருக்கே உரித்தான குணமாகும் நமது சங்க கால இலக்கியங்கள் இதனை நன்கு விளக்கியுள்ளன.வாழ்த்துவதற்கு வயது பேதம் தமிழர்களிடத்தில் இருந்ததுகிடையாது.அது மட்டும் இன்றி தமிழர்கள் இயற்கையையையும் இந்த பிரபஞ்ச வெளியிலிருந்தும் ஏராலமான நன்மைகளைப் பெற்று வந்துள்ளனர்.

**முடிவுரை:**

எண்ணங்களுக்கு வலிமை உண்டு அதனால்தான் என்னம்போல் வாழ்க்கை என்றும் நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம் என்ற சொற்கள் எப்போதும் இந்த பிரபஞ்ச வாழ்வில் வலிமையும் அன்பும் வாய்ந்த சொற்க்களாகவே அமைந்துள்ளது.அன்பு நிறைந்த எண்ணங்களும் செயல்களுமே மனித வாழ்வை செம்மைப்படுத்தி வள்ளுவரின் வாக்கிற்க்கிணங்க இந்த உலகை மேன்மையடையச் செய்வதாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**அடிக்குறிப்புகள்:**

1. திருக்குறள் - 50 (இல்வாழ்க்கை)
2. பாரதியாரின் தெய்வப்பாடல்கள் - பாடல் 14 அன்னையை வேண்டுதல்
3. திருக்குறள் - 45 (இல்வாழ்க்கை)
4. தொல்.களவியல்.நூற்பா.பாடல் எண்:1
5. குறுந்தொகை பாடல் எண். 63:1.3
6. குறுற்தொகை.பாடல் எண். 283
7. ஔவையார் தனிப்பாடல் திரட்டு பா.எண் -55
8. சுவாமி விவேகானந்தர் என் வாழ்வின் பணி ப.எண். 120
9. குறள் - 34
10. மேவது - 44
11. திரு.வி.கல்யாண சுந்தரனார்மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ப.எண்55